DEPOSITION OF WITNESS
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM
C.C.No.125/2025
PW - 4

| | | |
|---|---|---|
| Name | : | வினோத் (Lw - 4) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **Date : 17.03.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் LIC கட்டிடத்தில் குடியிருந்து சேந்தமங்கலம் கனரா வங்கி கிளையில் கிளர்க்காக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். **(**சாட்சி எதிரியை அடையாளம் காண்பித்தார்**.)**

கடந்த 04.10.2024ம் தேதி காலை சுமார் 12.00 மணியளவில் ஆஜர் எதிரி நான் பணிபுரியும் சேந்தமங்கலம் கனரா வங்கி கிளைக்கு வந்து எங்களது வங்கி மேலாளர் திருமதி.சுகண்யா அவர்களின் கேபினுக்குள் நுழைந்து பேசிக்கொண்டிருந்தார். அப்போது உள்ளே சத்தம் கேட்டது. மேலாளர் திருமதி.சுகண்யா அவர்கள் பியூன் சாந்தகுமாரை அழைத்து ஆஜர் எதிரியை வெளியேற்றினார்.

(சாட்சியானவர் போலிசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பகுதிபிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணைக்கு அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் என்னை விசாரித்தபோது எங்களது மேலாளர் திருமதி.சுகண்யா பலமுறை சேகரிடம் பேச விருப்பம் இல்லை என எடுத்துகூறியும், எங்களது வங்கிக்கு வந்து அவரை வேலைசெய்யவிடாமல் மனஉளைச்சலை ஏற்படுத்தினார் என்றும் இந்நிலையில் ஆஜர் எதிரி கடந்த 04.10.2024ம் தேதி ஆஜர் எதிரி எங்களது வங்கி

மேலாளர் திருமதி.சுகண்யா அவர்களின் அனுமதி இல்லாமல் அவரது கேபினுக்குள் நுழைய முற்பட்டதாகவும், அதனை நானும் உதவி மேலாளர் கௌதம் மற்றும் நகை மதிப்பீட்டாளராக மனோஜ்குமார் ஆகியோர் தடுத்து நிறுத்தி வெளியே அனுப்பியதாகவும் கூறிவிட்டு தற்போது மேற்படி சம்பவங்களை மறந்துவிட்டு மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

(எதிரி தரப்புக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**